**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். DVC 14/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | நிதர்சனா | **ஜாதி:** | |
| **கணவர் பெயர்:** | மயில்வாகனம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 27/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**25.04.2025**
**(1, 2, 4 எதிர்மனுதாரர்கள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவின் மனுதரராவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது நிரூபண வாக்குமூலத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையான ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. கடந்த 22.05.2023 ஆம் தேதிய மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. மனுதாரருக்கும் 1ஆம் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் அசல் திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. மனுதாரருக்கும் 1ஆம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தின் புகைப்படம் (எண்ணிக்கை-2) அசல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 06.12.2028 ஆம் தேதிய மனுதாரரின் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. திருமண சீர்வரிசை பட்டியல் நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)
6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் H.C.P(MD).NO.515/2023, நாள்: 05.06.2023 வழக்கின் தீர்ப்பு நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. கடந்த 30.06.2023 ஆம் தேதிய மாவட்ட சமூக நல அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை அசல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. கடந்த 21.07.2023 ஆம் தேதியில் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் ஆஜராகி எழுதிக்கொடுத்த வாக்குமூலம் அசல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எனவே மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணையானது எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**